தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 8-8-2015
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 36வது பட்டமளிப்பு விழா

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 36-வது பட்டமளிப்பு விழா, ஆகஸ்ட் 17, 2015 அன்று நண்பகல் 12.30 மணியளவில் கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில் நடைபெற உள்ளது.

இவ்விழாவிற்கு, மேதகு தமிழக ஆளுநர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேந்தருமான முனைவர்.கே.ரோசய்யா அவர்கள் தலைமையேற்கிறார். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரும் இப்பல்கலைக்கழகத்தின் இணை வேந்தருமான திரு.ஆர்.வைத்திலிங்கம் அவர்கள் புதிய அறநல்கை பரிசுகளையும், பதக்கங்களையும் அறிவிக்க உள்ளார். அமெரிக்க நாட்டிலுள்ள கார்னல் பல்கலைக்கழகத்தின் பயிர் வளர்ப்பு மற்றும் மரபியல் துறை பேராசிரியர் சூசன் மெக்கோச் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பட்டமளிப்பு விழா உரையாற்றவும், கௌரவ முனைவர் பட்டம் பெறவும் இசைந்துள்ளார்கள்.

இப்பட்டமளிப்பு விழாவில் அமெரிக்காவிலுள்ள ஐ.நா. உதவி பொதுச் செயலாளர் மற்றும் மூத்த ஒருங்கிணைப்பாளர், முனைவர்.பெட்ரோ மெட்ரானோ ரோஜாஸ் அவர்களும் கோயம்புத்தூர், கே.ஜி. தகவல் நிறுவனத்தின் இயக்குநர் திரு.அசோக் பக்தவச்சலம் அவர்களும் கௌரவ முனைவர் பட்டம் பெற உள்ளார்கள்.

இப்பட்டமளிப்பு விழாவில் 1170 மாணவர்கள் நேரடியாகவும் (in person) 389 மாணவர்கள் தபால் மூலமாகவும் (in absentia) பட்டங்களைப் பெற உள்ளார்கள்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்